**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 609** **நாள்: 25.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில் டெங்கு தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த 01.10.2026 முதல் நேற்று 24.10.2026 வரை 8,373 கிலோ எடையிலான பயன்படுத்தப்பட்ட டயர்கள் மற்றும் 35,056 கிலோ எடையிலான தேவையற்ற பயன்படுத்தப்படாத பொருட்கள் கண்டறியப்பட்டு மாநகராட்சிப் பணியாளர்களால் அகற்றப்பட்டன.**

**கொசுப்புழு உற்பத்தி கண்டறியப்பட்ட இடங்களில் கடந்த ஜனவரி மாதம் (01.01.2026) முதல் நேற்று (24.10.2026) வரை ரூபாய் 37,05,500/- அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களால் வீடுவீடாகச் சென்று டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 3,703 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக, கொசுப்புழு உருவாக வாய்ப்புள்ள டயர், தேங்காய் ஓடுகள் உள்ளிட்ட தேவையற்ற பொருட்கள் கண்டறிந்து அகற்றப்பட்டு வருகிறது. கடந்த 01.10.2026 முதல் நேற்று 24.10.2026 வரை 8,373 கிலோ எடையிலான பயன்படுத்தப்பட்ட டயர்கள் மற்றும் 35,056 கிலோ எடையிலான தேவையற்ற பயன்படுத்தப்படாத பொருட்கள் கண்டறியப்பட்டு மாநகராட்சிப் பணியாளர்களால் அகற்றப்பட்டன.

கொசுப்புழுக்கள் உற்பத்தி கண்டறியப்பட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், கட்டுமானப் பகுதிகள், வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் கடந்த ஜனவரி மாதம் (01.01.2026) முதல் நேற்று (24.10.2026) வரை ரூபாய் 37,05,500/- அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் அக்டோபர் மாதம் 01.10.2026 முதல் நேற்று (24.10.2026) வரை மட்டும் ரூ.11,44,100/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் வீடுகள், கட்டுமான நிறுவனங்கள், வணிக வளாகங்கள், பெரிய அளவிலான நிறுவனங்கள் உள்ளிட்ட தங்களது இடங்களில் நீர் தங்குவதற்கான பழைய டயர்கள், தொட்டிகள், தேங்காய் ஓடுகள் உள்ளிட்ட தேவையற்ற பொருட்களை அகற்றிடவும், நீர்த் தேக்கமின்றி வைத்திடவும், மாநகராட்சியின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்கு நல் ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**